செ.வெ.எண்:50 நாள்: 20.11.2021

அரசாணை எண்:644, வருவாய் மற்றும் பேரிடர் துறை, நாள்:11.10.2021-ன் படி **"விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்"** தொடர்பாக 2014 முதல் 2016 வரை தமிழ்நிலம் மென்பொருளில் கிராம கணக்குகள் பதிவேற்றம் செய்த போது ஏற்பட்ட கீழ்க்கண்ட கணினி பட்டா பிழை திருத்தங்கள் (**கணினி பிழைகள் மட்டுமே**) செய்திட கிராமம் தோறும் புதன் மற்றும் வெள்ளி கிழமைகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

1. **உட்பிரிவு எண் / புல எண் தவறாக இருந்தால்**
2. **பரப்பு திருத்தம்**
3. **பட்டாதாரர் பெயர் (அ) தந்தை / பாதுகாவலர் பெயர் திருத்தம்**
4. **உறவுமுறை திருத்தம்**
5. **பட்டாவில் உள்ள கலங்கள் காலியாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்**
6. **பரப்பு / பட்டாதாரர் பெயர் அருகிலுள்ள பரப்பு/பட்டாதாரர் பெயர் மாறி இருப்பது (Interchanged).**

எதிர்வரும் வாரத்தில் **24.11.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **அகரஒரத்தூர், புதுச்சேரி, ஆலங்குடி, மகாதானம், வடுகச்சேரி, செம்பியன்மகாதேவி,** ஆகிய கிராமங்களிலும், கீழ்வேளூர் வட்டத்தில் **அகரகடம்பனூர், வடக்குவெளி, கோயில் கண்ணாப்பூர், சாட்டியக்குடி,** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் ,**பெரியகுத்தகை, புஷ்பவனம்** ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் **பாங்கல், பனங்காடி** கிராமத்திலும் நடைபெற உள்ளது.

மேலும் 26..**11.2021** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **அகலங்கண், குறிச்சி, வடவூர், தெற்கு பொய்கை நல்லூர்** ஆகிய கிராமங்களிலும், கீழவேளுர் வட்டத்தில் **வேப்பஞ்சேரி, காரப்பிடாகை** ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் **தலைஞாயிறு-2, தலைஞாயிறு அக்ரகாரம், தலைஞாயிறு-1** ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் **திருக்குவளை, திருவாய்மூர்** கிராமத்திலும் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**